

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளரும், முற்போக்கு எழுத்தாளருமான பேராசிரியர் ராஜ் கௌதமன் மறைவெய்தியதையொட்டி அவரது உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான டி.பி.எம்.மைதீன் கான் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.மாலைராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம்தொகுதி தனியார் மண்டபத்தில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பி.எல்.ஏ 2 வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்ச் செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. உடன் பெரியகுளம் தொகுதி பொறுப்பாளர் முத்துராமலிங்கம், சரவணகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி முடித்த

# 11 பெண்கள் உள்பட 115 மாணவர்களுக்கு அர்ச்சகர் - ஓதுவார் சான்றிதழ்கள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, நவ.14 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன் தினம் (12.11.2024) ஆணையர் அலுவலகத்தில் 2023-2024-ஆம் கல்வியாண்டில் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சி முடித்த 11 பெண்கள் உள்பட 97 மாணவர்கள், ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் மூன்றாண்டு ஓதுவார் பயிற்சி முடித்த 9 மாணவர்கள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சி பள்ளியில் மூன்றாண்டு பயிற்சி முடித்த 9 மாணவர்கள் என ஆக மொத்தம் 115 மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற திராவிட மாடல் அரசு, கடந்த காலங்களில் முடக்கப்பட்டிருந்த அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை போன்ற பயிற்சி பள்ளிகளை எல்லாம் புனரமைத்து, மாணவர் சேர்க்கை நடத்தி பயிற்சி அளித்து வருகிறது. அந்த வகையில் கடந்தாண்டு அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி முடித்த 98 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டு பயிற்சி முடித்த 115 மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்கள் இன்று வழங்கப்பட்டுள்ளன. 2,000 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்த போராட்டத்தின் வெற்றியாக இதனை கருதுகிறோம். அனைத்திலும் அனைவரும் சமம், ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமுதாயம் காண வேண்டும் என்று நம் முன்னோர்கள் ஆண்டாண்டு காலமாக போராடி வந்த போராட்டத்தின் வெற்றியாக திராவிட மாடல் அரசில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற 11 பெண்கள் அதற்கான சான்றிதழ்களை பெற்றுள்ளனர். இது இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. ஓதுவார் பயிற்சியினை முடித்த 9 நபர்கள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சி முடித்த 9 நபர்கள் உள்பட 115 நபர்களுக்கும் துறையின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்து நீங்கள் அனைவரும் தேவாரம், மங்கல இசை முழங்க அனைத்து திருக்கோயில்களிலும் உங்களுடைய பணியை நீங்கள் தொடர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையை பொறுத்தளவில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ் 29 அர்ச்சகர்களுக்கு திராவிட மாடல் அரசு பணி நியமன ஆணைகளை வழங்கியிருக்கிறது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 11 திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 10 கல்லூரிகளில் 12,212 மாணவ, மாணவியரும், 25 பள்ளிகளில் 10,736 மாணவ, மாணவியரும் கல்வி பயின்று வருகின்றனர். அம்மாணவர்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி தந்திடும் வகையில் பள்ளிகளில் ரூ.107 கோடி மதிப்பீட்டில் 167 பணிகளும், கல்லூரிகளில் ரூ.83.33 கோடி மதிப்பீட்டில் 54 பணிகளும் நடைபெற்று வருகின்றன. பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவுத் திட்டம் முதன்முதலாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கட்டணமில்லா முழு உடற்பரிசோதனைத் திட்டம்!**

இந்த அரசு அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் காக்கும் அரசாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கொரோனா காலங்களில் அர்ச்சகர்களுக்கு உதவிதொகையாக ரூபாய் 4,000 மற்றும் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி மற்றும் மளிகை பொருட்களை வழங்கியது. அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் புத்தாடைகள் மற்றும் சீருடைகள், அர்ச்சகர்களின் ஓய்வூதியம் தொகை ரூ.4000 ஆக உயர்வு, 17,000 ஒரு கால பூஜை திட்ட அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத்தொகை, ரூ.136 கோடி செலவில் 89 குடியிருப்புகளில் 500 வீடுகள், ஒருகால பூஜைதிட்ட அர்ச்சகர்களின் குழந்தைகளின் உயர்கல்வி பயில 500 மாணவர்களுக்கு ரூ.10,000 கல்வி உதவித்தொகை, ஓய்வு பெற்ற அர்ச்சகர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை, ஆண்டிற்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடற்பரிசோதனை திட்டம் என பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம்.

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, அர்ச்சகர் பயிற்சி முடித்த மாணவர்களை உடனடியாக துணை அர்ச்சகர்களாக திருக்கோயில்களில் நியமனம் செய்து ரூ.8,000 ஊக்கத்தொகையாக வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை தொடர்ந்து கண்காணித்து நிச்சயம் நல்லதொரு தீர்ப்பை பெறுவோம். அதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறுபவர்கள் கல்வி கற்பதற்கு எவ்வித இடையூறுமின்றி பயிற்சி பள்ளிகளில் நேரத்தை ஒதுக்கி தந்திருக்கின்றோம்.

**நீதிமன்றத் தீர்ப்பு!**

ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சி முடித்தவர்களுக்கு எந்தெந்த திருக்கோயில்களில் அந்த பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றதோ அதற்கு முறையாக நேர்காணல் நடத்தி அந்த பணிகளை நிரப்பி வருகின்றோம். அர்ச்சகர் நியமனம் தொடர்பாக பலர் வழக்குகளை தொடுத்துள்ளதால் அந்த வழக்குகள் அனைத்தும் ஒருங்கிணைத்து உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த மாத இறுதிக்குள் அந்த வழக்கு விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது அரசின் சார்பிலும் துறையின் சார்பிலும் எடுத்து வைக்கப்படுகின்ற வாதங்களை குறித்து மூத்த வழக்கறிஞர்களோடு தொடர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கின்றோம். நீதிமன்ற தீர்ப்பு என்பது நியாயத்தின் பக்கம் தான் இருக்கும்.

திருவண்ணாமலை கார்த்திகை தீபப்பெருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அந்த மாவட்டத்தின் அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் ஒருங்கிணைப்பு கூட்டம் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது. திருச்செந்தூர் கந்த சஷ்டி விழா மற்றும் சூரசம்ஹார நிகழ்வினை எவ்வித சிறு அசம்பாவிதமும் இன்றி பக்தர்கள் மனநிறைவோடு மகிழ்ச்சி அடையும் வகையில் நடத்தினோமா, அதே போல திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவினையும் நடத்தி காட்டுவோம். இந்தாண்டு தீபத் திருவிழாவிற்கு சுமார் 35 லட்சம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது அதற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி தீபத் திருவிழாவை அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்போடு நடத்தி காட்டுவோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச. லட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி இரா. வான்மதி, திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 0136B / 2024
சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்கென 4 எண்ணிக்கையில் பள்ளி பேருந்துகள் (School Bus) கொள்முதல் செய்யும் பணி

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 28.11.2024 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 29.11.2024 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4903 / ஒப்பந்தப்புள்ளி / 2024 — கண்காணிப்பு பொறியாளர் (இ)


# பண்ருட்டி - மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்!

## காணொலிக் காட்சி வாயிலாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**கடலூர், நவ.13**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து பண்ருட்டி மற்றும் மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை காணொலி காட்சி வாயிலாக நேற்று (12.11.2024) திறந்து வைத்தார்.**

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் அவர்கள் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் அவர்கள் முன்னிலையில் பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு 12.11.2024 அன்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் 17 இடங்களில் பல்வேறு மாவட்டங்களில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்களை காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

இவற்றில் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி மற்றும் மங்களூர் ஆகிய 2 இடங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாயின் நிதியின் கீழ் ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் பண்ருட்டியிலும், ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் மங்களூரிலும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடங்களில் தரை தளம் 763.60 சதுர அடியும், முதல் தளம் 763.60 சதுர அடியும் மற்றும் வளாகம் 83.16 சதுர அடியும் என மொத்தம் 1610.36 சதுர அடி பரப்பளவில் போதிய இடவசதிகளுடன் வட்டார ஊராட்சி பிரிவு, கிராம ஊராட்சி பிரிவு, பொறியியல் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுடன் கூட்டரங்கம், கழிவறை ஆகிய உட்கட்டமைப்பு மற்றும் காற்றோட்ட வசதியுடன் கூடிய கட்டடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டள்ளது.

மேலும், இக்கட்டடங்கள் குடிநீர் வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் சாலை வசதிகள் மற்றும் வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி ஒன்றியக் குழு தலைவர் சபா.பாலமுருகன் அவர்கள், பண்ருட்டி ஒன்றியக்குழு துணைத் தலைவர் எ.தேவகி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) தேவராஜன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் செல்வி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் ஷபானா அஞ்சும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.கே.நாகராஜபூபதி, பண்ருட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், சக்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளர்

# பேராசிரியர் ராஜ் கௌதமன் மறைவு! தமிழ்ச் சமூகத்துக்கான பேரிழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 14 -

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளராக விளங்கிய பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்கள் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளராக விளங்கிய பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒடுக்கப்பட்டோர் பார்வையில் சமூக வரலாற்று ஆய்வுகள் படைப்பு தன்வரலாறு விமர்சனம் மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் விரிவான பங்களிப்புகளை வழங்கிய தமிழின் முன்னணி முற்போக்குச் சிந்தனைமுகமான ராஜ் கௌதமன் அவர்களது மறைவு என்பது தமிழ்ச் சமூகத்துக்கான பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது இணையர் பேராசிரியர் க.பரிமளம், அவரது தங்கை எழுத்தாளர் பாமா உள்ளிட்ட குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தமிழ் அறிவுப்புலத்தைச் சேர்ந்த தோழர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அ.அ. ஜின்னா**
**நவம்பர் 14 (2022)**



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தி திணிப்பிற்கு எதிராக பேச வைத்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து, அதனை சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் நிறுவியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**என்.வி.என். சோமு**
**நவம்பர் 14 (1997)**



திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், சட்டத்துறைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியில் துணை மேயராகப் பணியாற்றியவர்.

குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச் சாலையிலே இருந்தவர். அதுமுதல் கழகத்திற்காக பல தியாகங்கள் செய்து, சிறைக் கோட்டங்களுக்கு சென்று களம் பல கண்டு கழகத் தலைமை இடுகின்ற கட்டளைகளையெல்லாம் சிரமேல் தாங்கி அரும் தொண்டாற்றியவர்" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**